**16TAU02**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA DEGREE EXAMINATION MAY 2017**
(First Semester)

Branch – **TAMIL**

**IKKALA ILAKKIYAL –I KAVITHAI**

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ (10மதிப்பெண்கள்) (10x 2 = 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**

1 கண்ணன் என்னும் தாய் எத்தன்மையோடு கதைகள் சொல்வதாகப் பாரதியார் கூறுகிறார்?

2 கண்ணனாகிய தந்தையின் பைத்தியக்காரச் செயலாகப் பாரதியார் எதைக் குறித்துள்ளார்.

3 தற் போதைய தமிழ்ப் புலவர் நிலை எவ்விதம் உள்ளதென்றும் தமிழ்ப் புலவருக்குப் பொன்னாள் எதுவென்றும் பாவேந்தர் குறிப்பிடுகிறார்?

4 அறத்தலைவர் செயலாகப் பாவேந்தர் கூறும் அறிவுரை யாது?

5 சித்தார்த்தர் பிறந்தவுடன் கனா நூல் கற்றவர் கணித்துச் சொன்ன செய்தி யாது?

6 பால் தந்த சிறுவனிடம் புத்தர் கூறிய அறிவுரை யாது?

7 அன்பின் தன்மைக்குக் கூறப்பட்ட உவமைகள் யாவை?

8 அப்துல் ரகுமான் குழந்தைகளிடம் எதை வேண்டிக் கேட்கிறார். என்று 'பௌர்ணமிப் பிறை' கவிதை கூறுகிறது?

9 தன் குறைந்த பட்ச ஆசை எதுவென்று பகடி கவிதை கூறுகின்றது?

10 எத்தகைய வாழ்க்கை அமைய வேண்டுமென்று வெண்ணிலா கூறுகின்றார்.

பகுதி ஆ (25 மதிப்பெண்கள்) (5 x 5 =25)

**கீழ்க்கண்ட அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக..**

11 அ கண்ணனாகிய தாய் காட்டிய இயற்கைத் தோற்றங்கள் பற்றிய பாரதியின் கருத்துக்கள் யாவை?

அல்லது

ஆ) கண்ணனாகிய தந்தையின் நாமம், குலம் பற்றிப் பாரதியார் கூறியுள்ள செய்திகள் யாவை?

12 அ) விழா நடத்துவோருக்குப் பாவேந்தர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

அல்லது

ஆ) மாணவர்களுக்குப் பாவேந்தர் கூறும் அறிவுரை யாது?

**Cont...**

13 அ மரத்தின் அடியில் புத்தரைக் கண்ட சுஜாதை அவரை வா்ணித்துள்ள விதத்தை விளக்குக.

அல்லது

ஆ) மகனை இழந்த தாயின் துயரை எவ்விதம் அறிவுரை கூறி புத்தா் தெளிவித்தாா்?

14 அ) விலை மாதா்களின் மனக் குமுறலை 'வணக்கம் வள்ளுவ' வழி விளக்குக.

அல்லது

ஆ) ஒப்புதல் வாக்கு மூலத்தில் வெளிப்படும் உரிக்கப்பட்ட உண்மைகளை விளக்குக.

15 அ) குழந்தையின் மன உணா்வை வெண்ணிலா அவா்கள் வெளிப்படுத்த உள்ள விதத்தை விளக்குக.

அல்லது

ஆ) 'அது ஓா் அந்திப் பொழுது' கவிதை வெளிப்படுத்தும் கருத்துக்கள் யாவை?

பகுதி இ (30 மதிப்பெண்கள்) (3 x 10=30)

**<u>கீழ்க் கண்ட வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.</u>**

16 'கண்ணன் என்ற சற்குரு' பாரதியாருக்குக் கூறிய உபதேசங்களைத் தொகுத்துரைக்க.

17 மாணவா் பாடகா்,கூத்தா்,பாட்டியற்றுவோா்,ஏடெழுதுவோா் ஆகிய கலைஞா்கள் தமிழுக்குச் செய்ய வேண்டிய தொண்டாகப் பாவேந்தா் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18 யாக சாலையில் புத்தா் போதித்த அறவுரைகளையும் அதன் விளைவுகளையும் விவரி.

19 'குருடா்களின் யானை' 'தற்கொலை செய்' கவிதைகள் வழி வெளிப்படும் உண்மைகளை விவரி.

20 வெண்ணிலா அவா்கள் வெளிப்படுத்தி உள்ள கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

END